**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 49/2021**
**Prosecution Witness:7**

| Name | **திரு.வரதராஜன்** (PW 7) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **19th day of May 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை:–**

நான் தமிழ்நாடு காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்சமயம் ஈரோட்டில் குடியிருந்து வருகிறேன். கடந்த 29.06.2021ம் தேதி 17.00 மணிக்கு நான் மலையம்பாளையம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது, நடுப்பாளையத்தை சேர்ந்த சுந்தரவடிவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கையில் களவு சொத்துக்களுடன் இருந்த எதிரிகள் தினகரன், பிரபாகரன் ஆகியோர்களை ஆஜர் செய்து கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று மேற்படி புகாரின் பேரில் மலையம்பாளையம் காவல்நிலைய குற்ற எண்.115/2021 ச/பி.380 இதசவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு புகாரையும் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் மற்றைய நகல்களை சம்மந்தபட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

2. 29.06.2021ம் தேதி 17.45 மணிக்கு எதிரி தினகரன் என்பவர் தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஹரிதாசன் சாமி, சின்னன்னன் ஆகியோர்கள் முன்னிலையில் சிறப்பு சார்பு ஆய்வார் மன்சூர் அலி என்பவர் மூலம் மடிக்கணினியில் பதிவு செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.05.19 11:20:54 +0530

பெற்றேன். அதன் பின்னிட்டு எதிரி தினகரன் என்பவரிடம் இருந்து அவர் ஆஜர் செய்த பணம் ரூ.11,400/–(2000x2=4000, 500x11=5500, 100x18= 1800, 50x2=100) (2)TN 30 BU 3423 Honda Dio இருசக்கர வாகனம், (3) ASUS Black Colour Cellphone –1, (4) SKY Blue colour Cellphone–1, ஆகியவற்றை படிவம் 91 தயார் செய்து சாட்சிகள் ஹரிதாசன் சாமி, சின்னன்னன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றி படிவம் 91ல் மேற்படி சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். 29.06.2021ம் தேதி 19.15 மணிக்கு எதிரி பிரபாகரன் என்பவர் தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஹரிதாசன் சாமி, சின்னன்னன் ஆகியோர்கள் முன்னிலையில் சிறப்பு சார்பு ஆய்வார் மன்சூர் அலி என்பவர் மூலம் மடிக்கணினியில் பதிவு செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அதன் பின்னிட்டு 29.06.2021ம் தேதி 22.15 மணிக்கு எதிரி பிரபாகரன் என்பவரிடம் இருந்து பணம் ரூ.8,800/– (500x6=3000, 200x11=2200, 100x36=3600)ம், (2) TN 86 B 5551 YAMAHA FZ இருசக்கர வாகனம், (3) SAMSUNG Cell phone –1, (4) LAVA Cell phone –1, ஆகியவற்றை படிவம் 91 தயார் செய்து சாட்சிகள் ஹரிதாசன் சாமி, சின்னன்னன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றி படிவம் 91ல் மேற்படி சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். 29.06.2021ம் தேதி சாட்சிகள் சுந்தரவடிவேல், நாகமணி, ஆனந்தன், ராமலிங்கம், ஹரிதாசன் சாமி, சின்னன்னன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகள் பிரபாகரன், தினகரன் ஆகியோர்களை திரேக பரிசோதனை செய்து அடைப்பு காவல் அறிக்கை தயார் செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன்.

3. 30.06.2021ம் தேதி காலை 8.30 மணிக்கு சம்பவ இடமான நடுப்பாளையம், 10–மெயின்ரோடு சென்று சாட்சிகள் தர்மராஜ் மற்றும் கணபதி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 14 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.15 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் தர்மராஜ் மற்றும் கணபதி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ இடத்தில் காணப்பட்ட விரல்ரேகைகளை பரிசோதனை செய்து தடயங்கள் ஏதும்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.05.19 11:20:58 +0530

பதிவாகவில்லை என்று சான்று வழங்கிய மாவட்ட விரல்ரேகை பதிவு கூட சார்பு ஆய்வாளர் விஷ்ணுபிரகாஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான (1) பணம் ரூ.11,400/–(2000x2=4000, 500x11=5500, 100x18= 1800, 50x2=100) (2)TN 30 BU 3423 Honda Dio இருசக்கர வாகனம், (3) ASUS Black Colour Cellphone –1, (4) SKY Blue colour Cellphone–1, ஆகியவற்றை படிவம் 91ன் மூலம் சமூகம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.ASUS Black Colour Cellphone –1, சா.பொ.2 ஆகவும், SKY Blue colour Cellphone–1 சா.பொ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. (1)** பணம் ரூ.8,800/– (500x6=3000, 200x11=2200, 100x36=3600)ம், (2) TN 86 B 5551 YAMAHA FZ இருசக்கர வாகனம், (3) SAMSUNG Cell phone –1, (4) LAVA Cell phone –1 ஆகியவற்றை படிவம் 91ன் மூலம் சமூகம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. SAMSUNG Cell phone –1, சா.பொ.4 ஆகவும், LAVA Cell phone –1 சா.பொ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

4. இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து வழக்கு சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரிகள் தினகரன், பிரபாகரன் ஆகியோர்கள் மீது ச/பி.380 இதசவின் படி 10.08.2021ம் தேதி சமூகம் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

சம்பவம் பற்றி புகார்தாரர் சுந்தரவடிவேல் புகார் கொடுத்த பின்னிட்டு தான் சம்பவம் நடந்தது எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். புகார்தாரரை புகாரை 29.06.2021ம் தேதி மாலை 05.00 மணிக்கு தான் என்னிடம் கொடுத்தார் என்றால் சரிதான். அதன்பின்னிட்டு தான் நான் சம்பவ இடம் வந்து பார்வையிட்டு சாட்சிகளை விசாரித்தேன் என்றால் சரிதான். புகார்தாரர் புகாரில் தினகரன் என்பவர் எனது கடையில் திருடியதை ஒப்புக்கொண்டு ரூ.20,200/–ஐ எனது வசம் கொடுத்துவிட்டார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி தினகரன் மீது நடவடிக்கை எடுக்கும்படி என்னிடம் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். புகாரில் பிரபாகரன் என்பவரிடம் இருந்து திருடிய பணத்தை பெற்றதாகவோ அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படியும்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.05.19 11:21:02 +0530

என்னிடம் கூறவில்லை என்றால் சரியல்ல, இரண்டுபேர் மீதும் நடவடிக்கை எடுக்கும்படி கூறியுள்ளார், மேற்படி பிரபாகரனிடம் இருந்து பணம் கைப்பற்றியதாக புகாரில் கூறவில்லை என்றால் சரிதான் ஆனால் வண்டியை கைப்பற்றியதாக புகாரில் சொல்லியுள்ளார்.

2. புகார்தாரர் சுந்தரவடிவேல் குறுக்கு விசாரணையில் போலீசார் புகார்தருவதற்கு முன்பே சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள் என்று சொல்லியிருந்தால் சரியல்ல. நான் கொடுத்த புகாரிலும், அதன் பேரில்பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையிலும் 1ம் எதிரி தினகரன் கடையில் திருடிய ரூ.20,000/– என் வசம் கொடுத்தார் என்றால் சரிதான். எனது புகாரில் 2வது எதிரி பிரபாகரன் என்னிடம் திருடிய பணத்தை கொடுத்ததாக கூறவில்லை என்று சொல்லிருந்தால் அது தவறு. நாகமணி தனது குறுக்கு விசாரணையில் ஒரு நபரிடம் இருந்து ரூ.11,400/–ம், மற்றொரு நபரிடம் இருந்து ரூ.8,800/–ம் இருந்தது என்று எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் SI சார் கூறியதால் தான் தெரியும் என்று சொல்லியிருந்தால் அது தவறு. போலீசார் என்னை எங்கு வைத்து எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்றே போலீசார் சம்பவ இடத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள் என்று சொல்லியிருந்தால் அது தவறு. அ.சா.3 ஆனந்தன் முதல் விசாரணையில் அவர்கள் BAGல் இருந்த பணத்தை எடுத்துக்கொண்டு சென்றார்கள், எவ்வளவு எடுத்து சென்றார்கள் என்றுஎனக்கு தெரியாது என்று சொல்லியிருந்தால் அது தவறு.

3. சம்பவம் நடைபெற்ற உரக்கடைக்கு எதிரில் கிருத்திகா டிபார்ட்மென்டல் ஸ்டோர் உள்ளது என்றால் சரிதான், நானும் உரக்கடைகாரரும் CCTV கேமரா உள்ளதை காண்பித்தோம் என்றால் சரிதான், போலீசார் மேற்படி கடைகளில் CCTV கேமரா பதிவுகளை கைப்பற்றனார்களா என்றால் போலீசார் போனார்கள், ஆனால் கைப்பற்றினார்களா என்று தெரியாது என்று சொல்லியிருந்த நிலையில் நான் மேற்படி கடைகளுக்கு சென்று CCTV கேமரா பதிவுகளை கைப்பற்றினேனா என்றால் மேற்படி கடைக்கு சென்றேன் ஆனால் சம்பவம் எதுவும் பதிவாகாததால் நான் பதிவுகளை

கைப்பற்றவில்லை. நான் தாக்கல் செய்த இறுதி அறிக்கையில் மேற்படி CCTV பதிவுகளை பார்வையிட்ட போது அதில் சம்பவம் பதிவாகவில்லை என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. சாட்சி சின்னன்னன் தனது முதல் விசாரணையில் அவர்களிடம் இருந்து ரூ.8,800/- வாங்கிவிட்டோம் அதற்கு சாட்சி கையொப்பம் செய்யும் படி கூறியதால் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்று சொல்லியிருந்தால் சரிதான். புகார்தாரர் புகார் கொடுத்த பின்னிட்டு தான் எதிரிகள் திருடிய பணம் ரூ.20,200/-ஐ மொத்தமாக காவல்நிலையத்தில் வைத்து ஒப்படைத்தார் என்றால் புகார்தாரர் தான் ஒப்படைத்தார் என்றால் சரி, ஆனால் எதிரிகளிடம் இருந்து தான் கைப்பற்றியதாக சொன்னார், ஒப்புதல் வாக்குமூலத்தில் பிரபாகரன், தினகரனிடம் இருந்து கைப்பற்றியதை தெளிவாக சொன்னார்கள். மொத்தமாக ரூ.20,200/-ஐ பெற்றுவிட்டு எவ்வாறு தனித்தனியாக ரூ.11,400/- மற்றும் ரூ.8,800/- என்று குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் எதிரிகள் அளித்த ஒப்புதல்வாக்குமூலத்தில் தனித்தனியாக குறிப்பிட்டுள்ளேன்,

4. மேலும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின்அடிப்படையில் தான் இருசக்கர வாகனம் மற்றும் செல்போனையும் கைப்பற்றினேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் காவல்நிலையத்தில் வைத்து தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான் சாட்சிகளின் முன்னிலையில் வாங்கப்பட்டது ஒப்புதல் வாக்குமூலம். அரசு தரப்பு சாட்சி விஷ்ணுபிரகாஷ் கைரேகை நிபுணர் சம்பவ இடம் வந்து கைரேகை எதுவும் பதிவாகவில்லை என்று சான்று வழங்கினார் என்றால் சரிதான். புகார்தாரர் புகாரில் 1வது எதிரிதான் பணத்தை திருடியுள்ளார் என்றும், 2வது எதிரியை பற்றி குறிப்பிடாததால் அவர் மீது ஒரு பொய்யான புகாரை பதிவு செய்து சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் வரைபடம் எதுவும் தயார் செய்யப்படவில்லை என்றாலும், சரியான விதத்தில் புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.05.19 11:21:11 +0530

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.05.19 11:21:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்

நீதித்துறை நடுவர், கொடுமுடி.